**<u>ADM COURT, SANKARANKOVIL</u>**

**தேதி 11.08.2025**

**அசல் வழக்கு எண். 41/2018**

**<u>வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது சொந்தஊர் என்றால் பன்னீருத்து ஆகும். இவ்வழக்கின் 2ம் வாதியான சுப்புத்தாய் எனக்கு எவ்வகையில் உறவினர் என்றால் அவர் எனது உடன்பிறந்த தங்கை ஆவார். மேற்படி 2ம் வாதிக்கும் சேர்த்து நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குரை தபசில் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்குரை தபசில் சொத்தின் சர்வே எண்.159/5 ஆகும். வழக்குரை தபசில் சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 6 ஏக்கர் 28 சென்ட். மேற்படி மொத்த விஸ்தீரணத்தில் எவ்வளவு விஸ்தீரணம் பொறுத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 6 ஏக்கர் 28 சென்டில் 60 சென்ட் இடம் பொறுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரை தபசில் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாயார் மாடத்தியம்மாளுக்கு பாத்தியப்பட்டது.

2. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அ.வ.எண்.30/1960 வழக்கு யாரால் யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனது தாயார் மாடத்தியம்மாளால் வெள்ளத்தாய் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி அவஎண்.30/1960 வழக்கில் யாருக்கு எவ்வளவு சென்ட் இடம் ஒதுக்கப்பட்டது என்றால் சுப்பையாகோனாருக்கு 30 சென்ட் இடமும், மாடத்தியம்மாளுக்கு 30 சென்ட் இடமும் இவ்வழக்கில் ஒதுக்கப்பட்டது. மேற்படி அசல் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி 30 சென்ட் இடங்கள் பிரிக்கப்பட்டனவா என்றால் பிரிக்கப்படவில்லை. வழக்குரை தபசில் சொத்தான 60 சென்ட் இடம் எவ்வாறு எனக்கு பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் மேற்கூறிய அசல் வழக்கில் எனது தாயாருக்கு 30 சென்ட் இடம் ஒதுக்கப்பட்டும், சுப்பையாகோனாருக்கு

ஒதுக்கப்பட்ட 30 சென்ட் இடம் எனது தாயாருக்கு கிடைக்கப்பெற்றும் மொத்தம் 60 சென்ட் இடம் எனது தாயாருக்கு கிடைக்கப்பெற்று எனது தாயாரிடமிருந்து 60 சென்ட் எனக்கு கிடைக்கப்பெற்றது. மேற்படி அ.வ.எண்.30/1960 வழக்கில் எனது தாயார் மற்றும் சுப்பையாகோனாருக்கு ஒதுக்கப்பட்ட 30 சென்ட் இடங்களுக்கு அவர்கள் பெயரில் அளிக்கப்பட்ட பட்டா ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 60 சென்ட் இடம் பொறுத்து எனது பெயரில் ஏற்பட்ட பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். வழக்குரை தபசில் சொத்து பொறுத்து என் பெயரில் பிறப்பிக்கப்பட்ட பட்டாவின் பட்டா எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ.2 ஆவணம் ஒரு கூட்டுப்பட்டா என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளின் தகப்பனாரான செல்லத்துரையின் பெயர் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உரிமையாளர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்குரை தபசில் சொத்து எனது பெயரில் ஏற்பட்ட தனிப்பட்டா ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்குரை தபசில் சொத்து பொறுத்து தாக்கல் செய்யப்பட்ட பட்டாவான வா.சா.ஆ.2 ஆவணமும் கூட்டுப்பட்டா என்றாலும், மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1,2 பிரதிவாதிகளின் தகப்பனாரான செல்லத்துரையின் பெயரிலும் வழக்குரை தபசில் சொத்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்குரை தபசில் சொத்து பொறுத்து வா.சா.ஆ 2 ஆவணத்தின் மூலம் எனக்கு எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல.

4. வழக்குரை தபசில் சொத்தான 60 சென்ட் இடம் ஸ்தலத்தில் உள்ள 6 ஏக்கர் 28 சென்ட் இடத்திலிருந்து பிரித்துக்காண்பிக்க முடியாது என்றால் சரியல்ல. 6 ஏக்கர் 28 சென்டில் அனுமானத்தின்பேரில் 60 சென்ட் இடம் பொறுத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கு தபசில் சொத்தின் விபரங்கள் எனக்கு சரியாக தெரியாது என்றாலும், வழக்கு தபசில் சொத்து பொறுத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை

என்றாலும் சரியல்ல. அவ.எண்.30/1960 வழக்கில் ஒதுக்கப்பட்ட 30 சென்ட் இடங்கள் பிரிவினை செய்யப்பட்டதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் உள்ள தீர்ப்பு எந்த காலத்திலும் ஊர்ஜிதத்திற்கு வந்ததில்லை என்றாலும், அந்த ஆவணத்தின்படி வழக்குரை தபசில் சொத்து அனுபவிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. சுப்பையாகோனாரின் இறப்புச்சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மாடத்தியம்மாளின் வாரிசுசான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குரை தபசில் சொத்துக்களும், வேறு சொத்துக்களும் பச்சைமுத்து கோனார் மகன் செல்லத்துரைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்குரை தபசில் சொத்து மற்றும் அவருக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்கள் பொறுத்து பட்டா எண்கள்.989 மற்றும் 1031 ஆகிய பட்டாக்கள் அவர் பெயரில் ஏற்பட்டு மேற்படி சொத்துக்கள் அவர் அனுபவத்தில் இருந்து வந்தன என்றால் சரியல்ல. மேற்படி பட்டாக்கள் மூலம் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளுக்கு 06.02.2017 ம் தேதியிட்ட ஏற்பாட்டு ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி ஏற்பாடு ஆவணங்களின் அடிப்படையில் 1,2 பிரதிவாதிகள் பிராது தபசில் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், எனக்கு பிராது தபசில் சொத்து பொறுத்து எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

5. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள மற்ற பட்டாதாரர்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்காமல் எனது வழக்குரையில் நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 06.02.2017 தேதியிட்ட ஏற்பாடு ஆவணங்கள் செல்லத்தக்கது அல்ல என்று விளம்புகை செய்யக்கோரி நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்குரை தபசில் சொத்தில் எனக்கு அனுபவம் இல்லை என்றாலும், இல்லாத அனுபவத்திற்கு இடையூறு செய்ததாக கூறி பிரதிவாதிகளுக்கு எதிராக

வழக்குமூலம் இல்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வழக்குரை தபசில் சொத்தின் விபரங்கள் தவறானவை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும், என்னுடைய வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.